# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.18/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.6 |
| Name : | முருகேசன் |
| Father's/Husband Name: | சுப்பிரமணி |
| Village : | வேப்பந்தட்டை |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 37/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 30.05.2024.

**(1969-ம் ஆண்டின் 54 வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. M.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி மணிகண்டன் ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 7 ம் வகுப்பு வரை படித்துவிட்டு சென்ட்ரிங்க் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதல்ல. வழக்கு பற்றி எனக்க எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) நீதிமன்ற அழைப்பாணையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள கையொப்பமும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பமும் ஒன்றாக உள்ளது என்றால் பார்வை மகஜரில் உள்ள கையொப்பத்தில் Initial இல்லை. நான் ஏற்கனவே பார் வைத்து நடத்தி இருந்தேன். அந்த பழக்க வழக்கத்தில் நான் சில ஆவணங்களில் செய்த கையொப்பத்தை வைத்து வேறு யாரோ பார்வை மகஜரில்

செய்துள்ளார்கள். அது நான் செய்தது இல்லை. போலிஸ் விசாரணையில் கடந்த 21.05.2022 அன்று காலை அரும்பாவூர் போலிசார் வேப்பந்தட்டை HDFC Bank ATM அருகே வந்து இருசக்கர வாகனம் திருடபோனது தொடர்பாக விசாரித்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், எனது முன்னிலையில் போலிசார் தயார் செய்த பார்வை மகஜரில் நானும், இளையபெருமாள் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்சமயம் எதிரி எனக்கு பழக்கமானவர் என்பதால் உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3(i) சம்பவம் நடந்த தேதி போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்மன் கொடுத்த போது தான் வழக்கு பற்றி தெரியும் என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.18/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.7 |
| Name : | ரமேஷ்(தலைமை காவலர் –1696) |
| Father's/Husband Name: | வெங்கடாசலம் |
| Village : | வீரகனூர் |
| Taluk : | தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம் |
| Age : | 41 /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 30.05.2024.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. M.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி மணிகண்டன் ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போதும், சம்பவத்தின் போதும் அரும்பாவூர் காவல் நிலைய தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1–கலியமூர்த்தியை தெரியும். கடந்த 21.05.2022 ம் தேதி நானும், காவலர் 757–திரு.மணி என்பவரும் காலை 8.30 மணிக்கு காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது அன்றைய தினம் காலை 6.00 மணிக்கு பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வெங்கனூர் கிராமம், பாரதி நகரை சேர்ந்த சின்னசாமி மகன் கலியமூர்த்தி என்பவர் அவருக்கு சொந்தமான TN25AR0491 என்ற பதிவெண் கொண்ட Hero Passion Pro இருசக்கர வாகனத்தை வேப்பந்தட்டை பஸ் ஸ்டாப் அருகே HDFC ATM முன்பு நிறுத்தியிருந்ததை திருடி சென்ற மரவநத்தம் கிராமத்தை சேர்ந்த ராமசாமி மகன் மணிகண்டன் என்பவரை கையும் களவுமாக பிடித்து வழக்கு சொத்தான இருசக்கர வாகனத்துடன் காவல் நிலையத்தில் ஒப்படைத்து மேற்படி நபர் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தார்.

ii) ஆஜர் எதிரியை தான் அவ்வாறு கலியமூர்த்தி ஒப்படைத்தார். அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட இருசக்கர வாகனத்தை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.விமல் குமார் அவர்கள் காலை 8.30 மணிக்கு எங்கள் இருவர் முன்னிலையில் காவல் நிலையம் முன்பு வைத்து கைபற்றுதல் மகஜர் தயார் செய்து அதன் மூலம் கைபற்றினார். அதில் நாங்கள் இருவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைபற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி ஆவணம் தான் சிறப்பு உதவி ஆய்வாளரால் தயாரிக்கப்பட்ட கைபற்றுதல் மகஜர் ஆவணமாகும் (அது **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 புகைபடத்தில் உள்ள இருசக்கர வாகனத்தை தான் சிறப்பு உதவி ஆய்வாளர் கைபற்றினார். இது தொடர்பாக என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) கைபற்றப்பட்ட இருசக்கர வாகனத்தின் நிறம் மற்றும் மாடலை ஆய்வாளர் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரிதான். சிறப்பு உதவி ஆய்வாளர் என்னுடைய மேலதிகாரி என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கைபற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை